பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 06 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் அவசர நிலை அமல்படுத்தப்பட்ட நாளான இன்று அரசியல் சாசன படுகொலை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

2. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை பாதுகாப்புடன் வைத்திருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. நலிவடைந்து வரும் நெசவுத் தொழிலை மேம்படுத்துவதற்கு மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

4. பிளஸ்-2 பொதுத்தேர்வு மதிப்பெண்களில் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்த, மதிப்பெண் மாற்றமுள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

5. உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Shambhavi Kshirsagar - Abhinav Shaw** இணை தங்கப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் அவசர நிலை அமல்படுத்தப்பட்ட நாளான இன்று அரசியல் சாசன படுகொலை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

கடந்த 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதே நாள் அரசியல் சாசனம் ஒடுக்கப்பட்டபோது என்ன நிகழ்ந்தது என்பதை இந்த நாள் நினைவூட்டுகிறது.

அத்துடன் அவசர நிலை நடவடிக்கையின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மரியாதை செலுத்தும் நாளாகவும் இது உள்ளது.

உள்நாட்டு கலவரங்களைக் காரணம் காட்டி அரசியல் சாசனத்தின் 352வது பிரிவின்கீழ் அவசர நிலை அமல்படுத்தப்பட்டது.

அதன் காரணமாக மாநில அதிகாரத்தின் மீது மத்திய அரசு ஆதிக்கம் செலுத்தியது.

இதனால் பேச்சுரிமை, கருத்து சுதந்திரம் ஆகிய உரிமைகள் பறிக்கப்பட்டன.

இந்த அவசர நிலை அமல்படுத்தப்பட்டு கடந்த ஆண்டுடன் 50 ஆண்டுகள் நிறைவடைந்தது.

இது தொடர்பாக கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளின் நிறைவு விழா இன்று நடைபெறுகிறது.

மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிக்கு அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமை தாங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை பாதுகாப்புடன் வைத்திருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாநில அமைச்சர்கள் திரு. வெங்கட்ரமணன், திரு. காந்திராஜ், திரு. வினோத் ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது நேரடி நெல் கொள்முதல், பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன்

விவாதித்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரமான நெல்லை அனுமதிக்கப்பட்ட ஈரப்பத அளவுடன் தடையின்றி கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை பாதுகாப்பாக சேமித்து உரிய காலக்கெடுவில் அரவைக்கு அனுப்புவது, நெல் மூட்டைகள் மழைநீரால் பாதிக்கப்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அமைச்சர்கள் ஆய்வு செய்ததாக கூறப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப கிடங்குகள் மற்றும் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பது குறித்தும், அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நலிவடைந்து வரும் நெசவுத் தொழிலை மேம்படுத்துவதற்கு மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியாருக்கு நிகராக கைத்தறித் துறையில் நூறு சதவீதம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதே அரசின் நோக்கம் என்று கூறினார்.

இதில் உள்ள குறைகளைக் களைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

ஆண்டிப்பட்டி அண்ணா கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. விஜய் பாலாஜி குறிப்பிட்டார்.

<<<<>>>>

பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நேற்று முன்தினம் 10 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதையடுத்து முதலமைச்சர் திரு. விஜய், உடனடியாக தலையிட்டு காவல்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும் என்று திரு. நயினார் நகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பிளஸ்-2 பொதுத்தேர்வு மதிப்பெண்களில் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்து, மதிப்பெண் மாற்றமுள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் இன்று பிற்பகல் வெளியிடப்பட உள்ளதாக அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

இதை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்றும், இப்பட்டியலில் இடம்பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாள்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் மறுகூட்டல், மறுமதிப்பீடு ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க இன்று மேலும் ஒருநாள் கால அவகாசம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை மாவட்ட தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹோர்முஸ் நீரிணை வாயிலாக தற்காலிக கடல்வழித் தடத்தை திறக்க உள்ளதாக ஓமன் அறிவித்துள்ளது.

-------------

இந்தியா - ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலரை எட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

-------------

அர்மேனியா நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற அந்நாட்டுப் பிரதமர் திரு. **Nykol Tashinyan**-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் 3 நாள் பயணமாக இன்று லண்டன் செல்கிறார்.

--------------

கடந்த ஆண்டு ஒன்றரை கோடி பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளது.

--------------

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமான சிப்காட் சார்பாக மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து அமைச்சர் செல்வி கீர்த்தனா அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

--------------

தென்காசி மாவட்டம் கடனா நீர்த்தேக்கத்தில் இருந்து இன்று முதல் அக்டோபர் மாதம் வரை வினாடிக்கு 125 கன அடிக்கு மிகாமல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

--------------

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதி சாலைகளில் காவல்துறையினர் நடத்திய சோதனையில் தலைக்கவசம் அணியாமலும், வாகனங்களுக்கு காப்பீடுகளும் இல்லாமல் இயக்கிய 50 இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

--------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் ஆனித் திருவிழாவின் ஒருபகுதியாக சேஷ வாகனத்தில் பரமபத நாதனாக பெருமாள் வீதி உலா நடைபெற்றது.

--------------

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின்போது முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் அலுவலகத்திற்குள் செல்வதற்கு மின்சார வாகனத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி பத்மஜா தெரிவித்துள்ளார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Shambhavi Kshirsagar - Abhinav Shaw** இணை தங்கப் பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு குழு **10** மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இந்த இணை உலக சாதனையுடன் இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **7** தங்கம், **6** வெள்ளி, **8** வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

--------------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு **7** மணிக்கு தொடங்குகிறது.

--------------

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rounak Chouhan, Santhosh Ramraj, Devika Sihag** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் **Rounak Chouhan, 23-21, 21-16** என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய வீரர் **S.M.** சுப்பிரமணியனை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் **Rakshita Sree Santhosh Ramraj, 21-15, 21-8** என்ற செட் கணக்கில் செக் குடியரசின் **Tereza Svabikova**-ஐ வென்றார்.

**Devika Sihag 21-14, 21-14** என்ற செட் கணக்கில் பெரு நாட்டின் **Castillo Salazar**-ஐ வென்றார்.

--------------

ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் **1-6, 6-4, 6-4** என்ற செட் கணக்கில் லெபனானின் பெஞ்சமின் ஹசனை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் - ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**முதல் சுற்றில் இந்த இணை, 6-4, 4-6, 10-6, என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் Isaro - பெருவின் Merino இணையை வென்றது.**

**<<<<The End>>>>**